**தமிழ்க் கல்விக் கழகம் - யேர்மனி**

Tamilische Bildungsvereinigung e.V.

Bessemerstrasse 7/c
70435 Stuttgart

Bildung, Kultur und Sport

Tamilische Bildungsvereinigung e.V. Bessemerstr 7/c 70435 Stuttgart

Tel: +49 (0)7118709767
Fax: +49(0)7118709769
info@tbvgermany.com
**www.tbvgermany.com**
Steuernummer: 99018/55410

Vereinssitz Stuttgart
Reg: VR 6607
Amtsgericht Stuttgart


சுற்றறிக்கை 07 - 2024
ஸ்ருற்காட் 12.08.2024
நடுவச்செயலகம்

தமிழாலயங்களின் நிர்வாகிகள், ஆசிரியர்களின் செயற்பாட்டிற்கும் பெற்றோர்களின் கவனத்திற்கும்,

தமிழ்க் கல்விக் கழகத்தின் 100க்கு மேற்பட்ட தமிழாலயங்களில் பயிலும் அனைத்து மாணவர்களையும் ஒருங்கிணைத்து ஆண்டுதோறும் நடாத்தப்படும் தமிழ்த்திறன் போட்டி இவ்வாண்டும் நடைபெறவுள்ளது. போட்டிக்கான முழுமையான விளத்தங்களை இச்சுற்றறிக்கை மூலமாக அறியத்தருகின்றோம்.

# தமிழ்த்திறன் போட்டி 2024

- போட்டிகளில் அனைத்துத் தமிழாலயங்களும் பங்குபற்றிப் பயன்பெறுதல் வேண்டும்.
- போட்டிகளில் பங்குபற்றும் அனைத்து மாணவர்களும் தமிழாலயச் சீருடையை அணிந்துவருதல் வேண்டும்.




- போட்டிகள் 6 அகவை தொடக்கம் 18 அகவை வரையிலான மாணவர்களுக்கு மூன்று தெரிவுநிலைகளில் நடைபெறும்.
- தமிழாலயப் போட்டிகளுக்குரிய மதிப்பீட்டுப் படிவங்கள் எமது இணையத்தில் உள்ளன.
- அனைத்து அகவைப்பிரிவினரும் **மனனப் போட்டியைக் கட்டாயமாகத் தெரிவு** செய்வதோடு, **ஏனைய போட்டிகளில் ஏதாவது இரண்டைத்** தெரிவுசெய்து எல்லாமாக மூன்று போட்டிகளில் பங்குபற்ற வேண்டும்.
- தமிழாலயங்கள் ஒவ்வொன்றும் தெரிவுப்போட்டிகளைத் **தமிழாலய மட்டத்தில்** நடாத்தி, ஒவ்வொரு போட்டியிலும் முதல் ஐந்து நிலைகளைப்பெறும் போட்டியாளர்களின் விளத்தங்களை **20.10.2024ஆம் நாளுக்கு முன்னர் செயலகத்துக்கு அனுப்பிவைத்தல்** வேண்டும்.

- தமிழாலயங்கள் தமது தமிழ்த்திறன் போட்டியை நடாத்தும் **நாள், நேரம், நடுவர்களின் விளத்தங்கள், நடுவர்களின் எண்ணிக்கை** போன்றவற்றை முன்கூட்டியே மாநிலச் செயற்பாட்டாளருக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்.
- தமிழாலயப் போட்டிகள் எமது அறிவுறுத்தல்களின் அடிப்படையில் நிர்வாகியின் ஒருங்கிணைப்பின் கீழ் தமிழாலயத்தின் தமிழ்த்திறன் போட்டிப் பிரிவினரால் நடாத்தப்படுதல் வேண்டும்.
- நடுவர்களாக அதே தமிழாலயத்தின் ஆசிரியர்களோ, நிர்வாகிகளோ, பெற்றோர்களோ கடமையாற்றுவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அத்துடன் நடுவர்களுக்கான **பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றாதவர்கள் நடுவர்களாகப் பணியாற்ற முடியாது**..
- 35 புள்ளிகளுக்குக் குறைவாகப் பெறும் போட்டியாளர்கள் மாநிலப்போட்டியில் கலந்துகொள்ளும் தகுதியை இழப்பர். போட்டியின்றித் தெரிவாகும் போட்டியாளர்கள் **35க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுதல்** வேண்டும்.

| **பங்குபற்றுவோரின் தொகையும் தெரிவாகுவோரின் எண்ணிக்கையும்** | |
|---|---|
| 10 எண்ணிக்கைக்கு குறைவான மாணவர்கள் | 10 எண்ணிக்கைக்கு மேற்பட்ட மாணவர்கள் |
| 2 | 3 |

- தமிழாலயப் போட்டிகளின் முடிவுகளை நடுவர்கள் உடனே வெளிப்படுத்தாது நிர்வாகியிடம் மட்டுமே வழங்கவேண்டும். எல்லாப் போட்டிகளின் முடிவுகளையும் பெற்று அவற்றைத் தொகுத்த பின்னர், முடிவுகளை நிர்வாகியும் தமிழ்த்திறன் பிரிவுச் செயற்பாட்டாளரும் இணைந்து வெளிப்படுத்த வேண்டும்.
- தமிழாலயப் போட்டிகள் நிறைவு பெற்றபின் நடுவர்களினால் கணிக்கப்பட்ட போட்டிகளின் மதிப்பீட்டுப் படிவங்கள் அனைத்தையும் செயலகத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
- தமிழாலயங்களில் நடைபெறும் போட்டிகளை நிர்வாகியால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒருவர், கீழ்க் குறிப்பிடுவனவற்றைத் தவறாது **நிழற்படம் எடுத்து ஆவணப்படுத்த வேண்டும்.**

  ⇒ அகவணக்கம் மற்றும் தொடக்க நிகழ்வுகள்

  ⇒ போட்டிகள் நடைபெறும் அறைகளின் ஒழுங்கமைப்புகள்

  ⇒ நடுவர்களாகச் செயலாற்ற வருகைதரும் ஆசிரியர்களின் குழுநிலைப்படங்கள்

  அந்த நிழற்படங்களை கூகுள் இயக்ககத்தில் (Google Drive) ஏற்ற வேண்டும். போட்டிகள் நடைபெறும்போது அறைகளில் நிழற்படம் எடுத்தல் முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும்.
- தமிழாலயத் தெரிவுப்போட்டியிலிருந்து மாநிலத் தெரிவுப்போட்டிக்குத் தெரிவாகும் போட்டியாளர்கள் **ஒவ்வொரு போட்டிக்கும் 4,00 €** செலுத்துதல் வேண்டும்.
- **மாநிலப்போட்டி** 07.12.2024 சனிக்கிழமை நாடு முழுவதிலும் ஒரே நேரத்தில் ஆறு நிலையங்களில் நடைபெறும்.
- **இறுதிப்போட்டி** 08.03.2025 சனிக்கிழமை நடைபெறும்.

### போட்டிகளில் பங்கேற்கத் தகுதிபெற்ற அகவைப்பிரிவுகள்

| பிறந்தநாள் | 01.01.2018 - 31.12.2018 | 01.01.2016 - 31.12.2017 | 01.01.2014 - 31.12.2015 | 01.01.2012 - 31.12.2013 | 01.01.2010 - 31.12.2011 | 01.01.2008 - 31.12.2009 | 01.01.2006 - 31.12.2007 |
|---|---|---|---|---|---|---|---|
| **அகவைப்பிரிவு** | 6 | 7-8 | 9-10 | 11-12 | 13-14 | 15-16 | 17-18 |
| ஆத்திசூடி | ✓ | ✓ | | | | | |
| கொன்றைவேந்தன் | | | ✓ | | | | |
| நறுந்தொகை | | | | ✓ | | | |
| திருக்குறள் | | | | | ✓ | ✓ | ✓ |
| வாசிப்பு | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| சொல்வதெழுதுதல் | ✓ | ✓ | ✓ | ✓ | | | |
| உறுப்பமைய எழுதுதல் | ✓ | ✓ | ✓ | ✓ | | | |
| கட்டுரை | | | | | ✓ | ✓ | ✓ |
| உரையாற்றல் | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| கவிதை | | | | | ✓ | ✓ | ✓ |
| ஓவியம் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |

# மனனம்

- மனனமும் பொருள்கூறுதலும் பகுதிக்குள் வரும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, திருக்குறள் போன்றவை அனைத்தும் இச்சுற்றறிக்கையுடன் சிறப்பான தொகுப்புகளாக இணைக்கப்பட்டுள்ளன.
- மனனம் கூறும்போது உரையாற்றல் முறையில் அல்லாது இயல்பான முறையில் கூறப்படுதல் வேண்டும்.
- இப்போட்டிகளுக்குப் பொருள் கூறுதல் கேட்கப்படும்போது தனித்தனிச் சொல்லாகக் கேட்காது முழுச் சொற்றொடரையும் கூறிக் கேட்கப்படுதல் வேண்டும்.
- மனனப் போட்டிகளின்போது பங்குபற்றும் போட்டியாளர்களின் **பெற்றோர் அல்லது பாதுகாவலர்க்கு** மட்டுமே ஒப்புதல் வழங்கப்படும்.

| அகவைப்பிரிவு | விளத்தம் | பாடல்கள் | பொருள் கூறுதல் |
|---|---|---|---|
| 6 | ஆத்திசூடி | 10 | - |
| 7 – 8 | ஆத்திசூடி | 10 | முதற் பத்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |
| 9 – 10 | கொன்றைவேந்தன் | 20 | முதற் பத்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |
| 11 – 12 | நறுந்தொகை | 20 | முதற் பத்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |
| 13 – 14 | திருக்குறள்: **நடுவு நிலைமை** | 10 | முதல் ஐந்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |
| 15 – 16 | திருக்குறள்: **அடக்கமுடைமை** | 10 | முதற் பத்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |
| 17 – 18 | திருக்குறள்: **புகழ்** | 10 | முதற் பத்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |

# வாசித்தல்

- வாசிப்புப் போட்டியின்போது **பார்வையாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள்.**

| அகவைப்பிரிவு | நூல் | பாடல்கள் தவிர்த்து |
|---|---|---|
| 6 | தமிழ் சிறுவர் நிலை | →முதல் 5 அலகுகளில் |
| 7 – 8 | தமிழ் ஆண்டு 1 பாடநூல் | →முதல் 5 அலகுகளில் |
| 9 – 10 | தமிழ் ஆண்டு 3 பாடநூல் | →முதல் 6 அலகுகளில் |
| 11 – 12 | தமிழ் ஆண்டு 5 பாடநூல் | →முதல் 6 அலகுகளில் |
| 13 – 14 | தமிழ் ஆண்டு 7 பாடநூல் | →முதல் 5 அலகுகளில் |
| 15 – 16 | தமிழ் ஆண்டு 9 பாடநூல் | →முதல் 5 அலகுகளில் |
| 17 – 18 | தமிழ் ஆண்டு 10 பாடநூல் | →முதல் 5 அலகுகளில் |

# உரையாற்றல்

- உரையாற்றலில் பேச்சுத்தெளிவு, கருத்துச்செறிவு, அவையோரைக் கவரும் தன்மை ஆகியவை அகத்தியமாகக் கவனிக்கப்படும்.
- ஒவ்வொரு அகவைப்பிரிவினருக்குமான உரையாற்றும் தலைப்பும் நேரமும் கீழே தரப்பட்டுள்ளன. நேரம் அகத்தியமாகக் கணிக்கப்படும்.
- அவை வணக்கமும் குறிப்பிட்ட நேரத்திற்குள் அடங்கும்.
- இவ்வுரையாற்றல் போட்டிகள் **தமிழாலயத்தின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள் முன்னிலையில் நடுவர்களால் நடாத்தப்படவேண்டும்.**

| அகவைப்பிரிவு | தலைப்பு | மணித்துளிகள் |
|---|---|---|
| 7 – 8 | அறிவூட்டி வளர்த்த என் அப்பா | 3 |
| 9 – 10 | ஔவையார் ஓரடியில் கூறிய வாழ்க்கை நெறிகள் | 3 |
| 11 – 12 | கண்ணுக்கு இமைபோல் - எம் மண்காத்த மாவீரர் | 3 |
| 13 – 14 | தணியாத தாகமாய் தமிழீழமும் இலங்கையரசின் இனவழிப்பும் | 4 |
| 15 – 16 | இனவழிப்பின் அடையாளம் முள்ளிவாய்க்கால் | 4 |
| 17 – 18 | யேர்மனிய தமிழ்க் குமுகாயத்தில் வேர்களைத் தாங்கும் விழுதுகள் | 4 |

# கவிதை

- போட்டியில் பங்குகொள்ளும் போட்டியாளர்கள் தாங்கள் படிக்கப்போகும் கவிதையின் **நான்கு படிகளைப்** போட்டியின்போது நடுவர்களிடம் ஒப்படைத்து, நடுவர்களின் ஒப்புதலோடு ஒரு படியைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
- கீழ்வரும் நிரற்கூட்டில் உள்ள தலைப்புகளில் கவிதை அமைதல் வேண்டும்.
  - ⇒ கவிதை பார்த்தும் படிக்கலாம்.
  - ⇒ அவை வணக்கம் கவிதைக்குள் அடங்காது.
- கவிதைப் போட்டிகள் **தமிழாலயத்தின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள் முன்னிலையில் நடுவர்களால் நடாத்தப்படவேண்டும்.**

| அகவைப்பிரிவு | தலைப்பு | வரிகள் |
|---|---|---|
| 13 – 14 | தாயகமே தாயாக... தமிழ் மானம் பெரிதாக<br>தம் உயிர் தந்த மாவீரர்கள் | 18 |
| 15 – 16 | தமிழராய் உணர்வோடு வாழ்வோம் | 18 |
| 17 – 18 | முள்ளிவாய்க்கால் முடிவுறாத் துயர் | 20 |

# சொல்வதெழுதுதல்

- 6, (7–8) அகவைப்பிரிவினர் **கரிக்கோலால் (பென்சிலால்)** மட்டுமே எழுதுதல் வேண்டும். (9–10), (11–12) அகவைப்பிரிவினர் **எழுதுகோலால் (பேனாவால்)** மட்டுமே எழுதுதல் வேண்டும்.
- 6, (7–8), (9–10) அகவைப்பிரிவினருக்குச் சொல்வதெழுதுதல் சொல்லப்படும்போது குறியீடுகள் (காற்புள்ளி, முற்றுப்புள்ளி, வினாக்குறி போன்றன) **சேர்த்துச் சொல்லப்படும்.** ஆனால், (11–12) அகவைப்பிரிவினருக்கு **அக்குறியீடுகள் கூறப்படமாட்டாது.** இவ் அகவைப்பிரிவினர் தாங்களாகவே அக்குறியீடுகளை இடுதல் வேண்டும்.
- எல்லா அகவைப்பிரிவினருக்கும் **பந்தி பிரித்தல் கூறப்படும்.**

| அகவைப்பிரிவு | நூல் | பாடல்கள் தவிர்த்து |
|---|---|---|
| 6 | தமிழ் சிறுவர்நிலை | →முதல் 5 அலகுகளில் |
| 7 – 8 | தமிழ் ஆண்டு 1 பாடநூல் | →முதல் 5 அலகுகளில் |
| 9 – 10 | தமிழ் ஆண்டு 3 பாடநூல் | →முதல் 6 அலகுகளில் |
| 11 – 12 | தமிழ் ஆண்டு 5 பாடநூல் | →முதல் 6 அலகுகளில் |

# உறுப்பமைய எழுதுதல்

- 6, (7–8) அகவைப்பிரிவினர் **கரிக்கோலால் (பென்சிலால்)** மட்டுமே எழுதுதல் வேண்டும். (9–10), (11–12) அகவைப்பிரிவினர் **எழுதுகோலால் (பேனாவால்)** மட்டுமே எழுதுதல் வேண்டும்.

| **அகவைப்பிரிவு** | **நூல்** | **அலகுகள்** | **மணித்துளிகள்** |
|---|---|---|---|
| 6 | தமிழ் சிறுவர்நிலை | முதல் 5 | 20 |
| 7 - 8 | தமிழ் ஆண்டு 1 செயல்நூல் | முதல் 5 | 20 |
| 9 - 10 | தமிழ் ஆண்டு 3 செயல்நூல் | முதல் 6 | 20 |
| 11 - 12 | தமிழ் ஆண்டு 5 செயல்நூல் | முதல் 6 | 20 |

# கட்டுரை

- அனைத்து மாணவர்களும் **எழுதுகோலால் (பேனாவால்) மட்டுமே** எழுதுதல் வேண்டும்.
- இப்போட்டியில் பங்குபற்றுவோருக்கு வழங்கப்படும் நேரம் **45 மணித்துளிகள்.**
- ஒவ்வொரு அகவைப்பிரிவினரும் எழுதவேண்டிய கட்டுரைத் தலைப்பும் சொற்களின் எண்ணிக்கையும் கீழே தரப்பட்டுள்ளன.
- தலைப்பின் பொருள் விளங்க, குறிக்கப்பட்ட சொற்களின் எண்ணிக்கையை மீறாது கட்டுரை விதிகளைப் பேணிக் கட்டுரையை எழுதுதல் வேண்டும்.

| அகவைப்பிரிவு | தலைப்பு | சொற்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 13 - 14 | புலம்பெயர் நாடுகளில் தாய்மொழிக் கல்வியின் அகத்தியம் | 125 |
| 15 - 16 | இயற்கையைப் பேணுவோம் | 150 |
| 17 - 18 | யேர்மனியில் தமிழ் இளையோரின் இன்றைய வாழ்வியல் | 200 |

# மேலதிக போட்டி – ஓவியம்

- இப்போட்டி தமிழ்த்திறன் போட்டியின் அகவைப்பிரிவு விதிமுறைகளுக்கு உட்படவே நடாத்தப்படும்.
- ஒவ்வொரு மாணவரும் இப்போட்டியில் மேலதிகமாகப் பங்குபற்றலாம். தமிழ்த்திறன் போட்டியில் பங்குபற்றும் போட்டிகளின் எண்ணிக்கை, இவ் எண்ணிக்கைக்குள் சேர்க்கப்படமாட்டாது.
- ஓவியம் வரைவதற்கு அகவைபிரிவுக்குப் ஏற்பத் தாள்கள் வழங்கப்படுதல் வேண்டும்.
- எழுதும் கருவிகளையும் நிறந்தீட்டும் துணைக்கருவிகளையும் பயன்படுத்தி ஓவியம் வரைதல் வேண்டும். மேலதிகமாக எதுவும் (அளவுகோல், வட்டாரி போன்றவை) பயன்படுத்தக்கூடாது.
- பெற்றோர், பார்வையாளர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாரகள்.

| அகவைப்பிரிவு | தலைப்பு | **மணித்துளிகள்** | தாளின் அளவு |
|---|---|---|---|
| 6 | மகிழுந்து | 60 | A4 |
| 7 - 8 | தேசியப்பறவை - செண்பகம் | 60 | A4 |
| 9 - 10 | கடற்கரை ஓரத்தில் உள்ள வீடு | 60 | A3 |
| 11 - 12 | தாயகத்திலுள்ள வகுப்பறை | 60 | A3 |
| 13 - 14 | உதைபந்தாட்டம் | 60 | A3 |
| 15 - 16 | முள்ளிவாய்க்கால் அவலங்கள் | 60 | A3 |
| 17 - 18 | வெள்ளப்பெருக்கு | 60 | A3 |

தமிழாலயப்போட்டி, மாநிலப்போட்டி ஆகியவற்றில் பங்குபற்றி, முதல் மூன்று நிலைகளைப்பெறும் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் தமிழாலயங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். இறுதிப்போட்டியில் பங்குபற்றும் அனைத்துப் போட்டியாளர்களுக்கும் பங்குபற்றியதற்கான சான்றிதழ்களுடன் வெற்றிப்பதக்கமும் இறுதிப்போட்டி நடைபெறும் மண்டபத்தில் வழங்கப்படும். அத்துடன் இறுதிப்போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று நிலைகளைப்பெறும் மாணவர்களுக்கு 2025இல் நடைபெறவுள்ள எமது 35ஆவது அகவை நிறைவு விழாவில் சான்றிதழும் வெற்றிக்கிண்ணமும் வழங்கி மதிப்பளிக்கப்படும்.

இறுதிப்போட்டியின்போது நடைபெறும் சிறப்புப் போட்டிகள் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டியுள்ளதால் இவ்வாண்டும் அப்போட்டிகள் நடைபெறும். அவை தொடர்பான மேலதிக விளத்தங்கள் மாநிலப்போட்டி நிறைவு பெற்ற பின்னர் அறியத்தரப்படும்.

மாநிலப்போட்டி, இறுதிப்போட்டி ஆகிய இரு போட்டிகளின் முடிவுகள் போட்டி முடிந்த பின்னர் விரைவில் நிர்வாகிகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

தமிழ்த்திறன் போட்டி பற்றிய மேலதிக விளத்தங்களுக்குத் தமிழ்த்திறன் பிரிவுப் பொறுப்பாளர் இராஜ.மனோகரன் (0171/5736211) அவர்களுடன் தொடர்புகொள்ளவும்.

2023ஆம் ஆண்டு 100க்கு மேற்பட்ட தமிழாலயங்களிலிருந்து 1500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு தங்கள் தமிழ்த்திறனை வெளிப்படுத்தினார்கள். அவர்களைத் தமிழ்க் கல்விக் கழகத்தின் சார்பில் வாழ்த்துவதோடு, இவ்வாண்டும் அனைத்து மாணவர்களும் தமிழ்த்திறன் போட்டியில் பங்குபற்றி உங்கள் தமிழ்த்திறனை வெளிப்படுத்தும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இச்சுற்றறிக்கையை உங்களது தமிழாலய ஆசிரியர்கள், பெற்றோர்கள், நிர்வாகக்குழுவினர் அனைவருக்கும் படியெடுத்து தவறாது வழங்குதல் வேண்டும்.

நன்றி.

12.08.2024

செ.லோகானந்தம் (லோகன்)
பொறுப்பாளர்

இராஜ.மனோகரன்
தமிழ்த்திறன் பிரிவுப் பொறுப்பாளர்